මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date.

# ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
# Human Rights Commission of Sri Lanka

செயலாளர்
பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு - 07

**அரச நிறுவனங்களில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 2020 பாராளுமன்ற தேர்தலின்போது சம்பளத்துடனான தனிப்பட்ட விடுமுறைகள் குறைக்கப்படாமல் தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் விடுமுறை பெற்றுக்கொடுத்தல்**

அரசியலமைப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்யும் நோக்கில் அந்த சட்டங்கள் மற்றும் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், அதனை ஊக்குவிப்பதற்க்காக நிறைவேற்று அதிகாரம், நிர்வாக நடைமுறைகள் சம்பந்தமாக அவதானித்து சட்டம் மற்றும் நிர்வாக ரீதியிலான அலுவல் நடைமுறைகளை தயாரிக்கும்போது அரசாங்கத்திற்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொடுத்தல், ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அந்த நடைமுறைகளை உரிய பிரகாரம் ஏற்புடைய நிறுவனங்கள் நடைமுறைபடுத்துகின்றனவா? என்பது சம்பந்தமாக மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தேவையான அனைத்து விடயங்களையும் மேற்கொள்வதற்கு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் தேவையான அதிகாரங்கள் எமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் ”எவரும் கைவிடப்படாத பாராளுமன்றத் தேர்தலை உறுதி செய்வோம்” எனும் தொனிப்பொருளில் பிரஜைகளின் இறைமையை வாக்களிப்பு ஊடாக செயல்வலுப்பெறச்செய்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. பிரஜைகளின் இறைமையை உறுதி செய்வதற்காக அரச நிறுவனங்களில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தேசிய தேர்தல்களின்போது சம்பளத்துடனான அவர்களது தனிப்பட்ட விடுமுறைகள் குறைக்கப்படாமல் தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் விடுமுறையை பெற்றுக்கொடுப்பதற்காக பொருத்தமான தலையீட்டை பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொள்ளுதலானது அந்த ஊழியர்களின் சர்வஜன வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு பாரிய உதவியாக இருக்குமென்ற விடயம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது.

ප්‍රධාන කාර්යාලය / தலைமைக் காரியாலயம் / Head Office: 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-04. / 14, R.A.De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94-11- 2505580/81/82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2505541/74
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 011-2505575 / 1996
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: sechrcsl@gmail.com
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

அதற்கிணங்க, தங்களது அமைச்சு இந்த விடயம் தொடர்பாக பொருத்தமான தலையீட்டை மேற்கொள்ளுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

கலாநிதி தீபிக்கா உடகம
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

2020 யூலை மாதம் 13 ஆம் திகதி

பிரதி - தவிசாளர், இலங்கை தேர்தல் ஆணைக்குழு.